**Gesundheitsdienst der Stadt Bern**
Monbijoustrasse 11
3001 Bern
Tel 031 321 68 27

கோடையில் ஆரம்பப் பாடசாலையில் சேரவிருக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கானது

## ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்துகொள்ளுதல்

**பெற்றோருக்கான கடிதம்**

மிகவும் மரியாதைக்குரிய பெற்றோருக்கு

உங்கள் பிள்ளை எதிர்வரும் ஆவணியில் ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்துகொள்ளலாம். இத் தருணம் பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். அதிகமான பிள்ளைகளுக்கு இது எவ்வித பிரச்சினைகளுமின்றி நிறைவேறும்.

அடுத்து வரவுள்ள பெற்றோர் கலந்துரையாடல்களில், உங்கள் பிள்ளை ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்துகொள்வது எவ்வாறு இடம்பெறும் என்பது குறித்து பாலர்பாடசாலை ஆசிரியர்கள் உங்களுடன் கலந்துரையாடிக் கொள்வார். அங்குள்ள ஆசிரியர்கள் கடந்த இரு வருடங்களாக உங்கள் பிள்ளையை பல விடயங்களில் அவதானித்திருப்பார்கள்.

ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் வழமையான நடைமுறையில் ஏதாவது பிரச்சினைகள் எழுந்தால், பின்வரும் வசதிகளைக் கைக்கொள்ளலாமா என்ற கேள்வி உள்ளது:

- ஆரம்பப் பாடசாலையில் தாமதமாகச் சேர்ந்து கொள்வது
  இந்த வசதி குறித்து நீங்கள் உங்கள் பாலர் பாடசாலை ஆசிரியர்களோடு கலந்துரையாடிக் கொள்ளலாம். இந்த நடவடிக்கைக்கு நீங்களும் ஆசிரியர்களும் ஆதரவு தெரிவித்தால், பாடசாலைத் தலைமைத்துவம் மேலும் ஒருவருட பாலர்பாடசாலைக்கு அனுமதிக்கும்.

- பாடசாலையில் சேர்வதற்கான இருவருடங்கள்:
  பாடசாலையில் சேர்வதற்கான இருவருடங்கள் என்பது, ஆரம்பப் பாடசாலையில் சேர்வதற்கு ஓரளவு தகுதியான பிள்ளைகளுக்கு மட்டுமானது ஆகவே இவ்வாறான சேர்தலுக்கு சிறிது அதிக காலம் தேவைப்படுகின்றது.
  பாடசாலையில் சேர்வதற்கான இருவருடங்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு பாடசாலை வட்டாரத்தையும் பொறுத்து 1ம் வகுப்பிலோ அல்லது பாடசாலையில் சேர்க்கும் ஒரு பிரத்தியேக வகுப்பிலோ ஊக்கமளித்துக் கற்பிக்கப்படும். இந்த இரு வகைகளிலும் பாடசாலையின் 1ம் வகுப்புப் பாடங்கள் இரு வருடங்களுக்குப் பகிரப்படும். இருவருடங்களின் பின்பு பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலையின் 2ம் வகுப்பில் சேர்ந்து கொள்வார்கள். பாடசாலையில் சேர்வதற்காக இரு வருடங்கள் கற்பது, இரு பாடசாலை வருடங்களாகக் கருதப்படும்.

ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் எப்பொழுதும் முதலில் பாலர்பாடசாலை ஆசிரியர்களோடு கலந்துரையாடுங்கள். தற்சமயம் பாடசாலையில் சேரும் விடயத்தில் ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் அல்லது தற்சமயம் வளர்ச்சித் தராதரத்தில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்படின், இப்படியான ஒரு விளக்கத்தைப் பெற்றுக்காள்வதற்கு ஒரு ஆண் அல்லது பெண் பாடசாலை வைத்தியர் அல்லது வளர்ப்பிற்கான ஆலோசனை நிலையத்தை நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். இதற்காக விண்ணப்பிக்கும் நடைமுறைகளை பாலர்பாடசாலை ஆசிரியர்கள் அறிந்திருப்பார்கள். உங்களுக்கு மேலதிக கேள்விகள் இருப்பின் பாடசாலை வைத்திய சேவையினர் விளக்கம் தரத் தயாராக உள்ளனர்.

ஆண் மற்றும் பெண் பாடசாலை வைத்தியர்கள் குழு